DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of Judicial Fast Track Magistrate, Srivilliputtur.

STC.No. 1360/2025

Deposition of Witness for P.W. 2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | கோவிந்தன் | **தாலுகா** | : | |
| **த.பெ.** | : | நடுகாட்டன் | **தொழில்** | : | |
| **ஊர்** | : | | **வயது** | : | |

Solemenly affirmed in accordance with the Provisions of Act X of 1873 of the day of 21.11.2025.

புகார்தாரர் ஆஜர்.எதிரி ஆஜரில்லை. இணையவழி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் தரப்பினர் அல்ல. புகார்தாரர் தரப்பில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்ற அழைப்பாணை கிடைக்கப் பெற்றது. கடந்த 18.11.2025 அன்று ஒரு துஷ்டி ஏற்பட்டதால் என்னால் நீதிமன்றத்தில் ஆஜர் ஆக முடியவில்லை. நான் என் ஆதார் அட்டை எண். 8756 9009 1523(நகல்) தாக்கல் செய்கிறேன். அது **<u>பு.சா.ஆ.6</u>** ஆகும். எனக்கு புகார்தாரரை தெரியும் நான் என் சொந்த விஷயமாக புகார்தாரர் அலுவலகத்திற்கு அடிக்கடி செல்வேன். நான் அலுவலகம் சென்ற போது குருசாமி என்ற நண்பர் கடன் கேட்டிருக்கிறார். அவருக்கு நான் பணம் கொடுக்கவேண்டும் சிறிது நேரம் காத்திருங்கள் எனச் சொன்னார். குருசாமி வந்தவுடன் குருசாமிக்கு புகார்தாரர் ரூபாய் கொடுத்தார்.

அதற்கு பதிலாக குருசாமி ஆக்சிஸ் வங்கி, ஸ்ரீவில்லிபுத்தூர் கிளை காசோலையை ரூ.7,50,000/- என எழுதிக் கொடுத்தார். எழுதி கொடுத்துவிட்டு ரூ.7,50,000/- பணம் வாங்கிக் கொண்டார்.

**<u>குறுக்கு விசாரணை :</u>**

எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்
திருவில்லிபுத்தூர்.